www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

S

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண்:

## பொதுத் தமிழ்

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

அ) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 14×1=14

1. மொழிமுதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.
   அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்
   இ) ரூபாய், லட்சாபதி ஈ) றெக்கை, அங்ஙனம்
2. "வான் பொய்த்தது" - என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப் பொருள்
   அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை
   இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது
3. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க:
   1) வெள்ளிவீதியார் - அ) புறநானூறு
   2) அண்ணாமலையார் - ஆ) சி.சு. செல்லப்பா
   3) வாடிவாசல் - இ) குறுந்தொகை
   4) இளம்பெருவழுதி - ஈ) காவடி சிந்து
   அ) அ ஆ இ ஈ ஆ) அ ஈ அ இ இ) இ ஈ ஆ அ ஈ) இ ஈ அ ஆ
4. நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் ............ மாணப் பெரிது.
   அ) கடலினும் ஆ) நிலத்தினும் இ) மலையினும் ஈ) வானினும்
5. பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால் அறிவுறுத்துவது
   அ) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் ஆ) வறுமையிலும் செம்மை
   இ) வாய்மையே வெல்லும் ஈ) செல்வச் சிறப்பு
6. ஆனந்தரங்கருக்கு தொடர்பில்லாதது எது?
   அ) மொழிப்பெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு
   இ) தலைமைத்துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை
7. *கூற்று : 1* தஞ்சை பெரிய கோவிலுள்ள ஓவியங்கள் எஸ்.கே. கோவிந்தசாமி கண்டறிந்தார்
   *கூற்று : 2* அங்குள்ள சோழர்காலத்து ஓவியங்கள் ஃபிரெஸ்கோ வகையைச் சார்ந்தவை.
   அ) கூற்று 1 சரி கூற்று 2 தவறு ஆ) கூற்று இரண்டும் சரி
   இ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி ஈ) கூற்று இரண்டும் சரி
8. "ஜனப்பிரளயம்" என்னும் வடமொழிச்சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?
   அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை
9. யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்? - இது எவர் மொழி?
   அ) வாய்க்கால் ஆ) நாங்கூழ் இ) நடராசன் ஈ) புல்
10. சமண சமயத்தின் எட்டாம் தீர்த்தங்கரரான சந்திரப்பிரபாவின் கோயில் அமைந்துள்ள மாவட்டம் எது?
    அ) நாமக்கல் ஆ) ஈரோடு இ) திருப்பூர் ஈ) கோவை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக் குறிப்பு
    அ) உரிச்சொல், ஈற்றுப்போலி ஆ) வினைத்தொகை, இடவாகுபெயர்
    இ) வினையெச்சம், வினைத்தொகை ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை
12. தாகூர் ............ என்ற கவிதை நூலுக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்றார்.
    அ) கீதாஞ்சலி ஆ) கோரா இ) காரே பைரே ஈ) வால்மீகி பிரதீபா
13. தமிழர்களின் பாரம்பரிய நாள் எது?
    அ) பிப்ரவரி 14 ஆ) ஜனவரி 14 இ) ஏப்ரல் 14 ஈ) சூன் 14
14. ஒட்டுப் போடாத
    ஆகாயம் போல - இந்த
    உலகமும் ஒன்றே தான் ............. இக்கவிதையில் பயின்று வருவது
    அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி

## பகுதி - II

### பிரிவு - அ

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக: 3×2=6

15. "பாயிரம்" பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?
16. எதற்கு முன் நல்ல செயல்களை விரைந்து செய்ய வேண்டும் என்று குறள் கூறுகிறது?
17. அகநானூற்றின் பிரிவுகள் யாவை?
18. "நீளும் கைகளில் தோழமை தொடரும்
    நீளாத கைகளில் நெஞ்சம் படரும்" - தொடை நயங்களை எடுத்தெழுதுக.

### பிரிவு - ஆ

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: 2×2=4

19. தமிழ்நாட்டின் மாநிலமரம் - சிறுகுறிப்பு வரைக.
20. உ.வே.சா அவர்கள் பயின்ற கல்விமுறை பற்றிக் குறிப்பு வரைக.
21. நாட்டுப்புறத்திலும், பட்டணத்திலும் சிறந்து விளக்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?

### பிரிவு - இ

எவையேனும் ஏழனுக்கு விடை தருக: 7×2=14

22. *பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக :*
    அ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது
    ஆ) தேர்வெழுத வேகமாகப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.
23. *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:*
    அ) வலி, வளி, வழி (அல்லது) ஆ) பொரி, பொறி
24. *வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:*
    அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



25. *சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க:*
அ) வைகை - (அல்லது) ஆ) எட்டு வரை -
26. *பகுபத உறுப்பிலக்கணம் தருக :* அ) மெலிந்து (அல்லது) ஆ) துய்த்தல்
27. *புணர்ச்சி விதி தருக :* அ) செங்கயல் (அல்லது) ஆ) மண்ணுடை
28. *கலைச்சொல் தருக :* அ) Journalist ஆ) Multiple Personality
29. *மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக:*
அ) எதிர்நீச்சல் (அல்லது) ஆ) மதில் மேல் பூனை
30. உடனிலை மெய்ம்மயக்கம் என்றால் என்ன? எ.கா. தருக.

## பகுதி - III

### *பிரிவு - அ*

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: 2×4=8**

31. "சால வாவியில் செங்கயல் பாயும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
32. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப்படும் - இக்குறட்பாவை அலகிட்டு வாய்பாடு கூறுக.
33. தமிழகப் பெண்கள் பாடிக்கொண்டே விளையாடும்போது வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துகளாகத் திருச்சாழல் உணர்த்துவன யாவை?
34. வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடுவன யாவை?

### *பிரிவு - ஆ*

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: 2×4=8**

35. "என்னுயிர் தமிழ்மொழி என்பேன்" என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக.
36. கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகம் (KVT COMPLEX) பற்றி நீவிர் அறிவன யாவை?
37. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?
38. தாமஸிகம் என்றால் என்ன?

### *பிரிவு - இ*

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக: 3×4=12**

39. வேற்றுமை அணி விளக்குக.

(அல்லது)

உவமையணியை எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

40. *இலக்கிய நயம் பாராட்டுக (மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக):*

செந்நெல்லும் கரும்பும் விளைந்தனவே - நல்ல
தேன்பொழி மலர்களும் விரிந்தனவே
இன்னலும் பசியும் போயொழிக - தேசம்
எழிலுடன் கூடியே நலமுறுக.
பிரிவுகள் பேசியே பூசலிட்ட - பழம்
பேதமை தனைத்தள்ளி அனைவருமே
ஒருதனிக் குடும்பமாய் வாழ்ந்திடுவோம் - நம்முன்
ஒற்றுமை ஓங்கிடச் செய்திடுவோம்

- பெ. தூரன்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



41. *பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக:*

அ) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

(அல்லது)

ஆ) வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்

42. *தமிழாக்கம் தருக :*

1. Just Living is not enough. One must have sunshine, freedom and a little flower.
2. Look deep into nature and than you will understand everything better.
3. Simplicity is nature's first step and the last of art.
4. Roads were made for journeys not destinations.

43. மெய்ப்புத் திருத்துநர் பணிவேண்டி நாளிதழ் முதன்மையாசிரியருக்குக் கீழ்காணும் விபரங்களுடன் தன்விவரக்குறிப்பு ஒன்றை எழுதுக.

(பெயர், வயது, பாலினம், பிறந்தநாள், பெற்றோர், முகவரி, அலைபேசி எண், மின்னஞ்சல், முகவரி, அறிந்த மொழிகள், எடை, உயரம், குருதிவகை, கல்வித்தகுதி)

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **3×6=18**

44. அ) "அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்" - இக்கூற்றை முப்பால்வழி விளக்குக.

(அல்லது)

ஆ) மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

45. அ) பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபு வழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.

(அல்லது)

ஆ) 'கல்லும் கதை சொல்லும்' - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

46. அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

(அல்லது)

ஆ) நர்த்தகி நடராஜின் நேர்காணல் வழி அறிந்தவற்றை தொகுத்து அளிக்க.

## பகுதி - V

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக: **4+2=6**

அ) "ஆக்கியோன் பெயரே" .......... - எனத்தொடங்கும் நன்னூல் பாடலை எழுதுக.

ஆ) 'யான்' என முடியும் குறளை எழுதுக.

----------

BHARATHIRAJA A
M.Sc., M.Ed., M.Phil., D.O.A
P.G.T in Zoology
De Britto Hr. Sec. School.
Devakottai.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com